கையை அறிவித்து ஒரு கோடி வரையில் லைசென்ஸ் தேவை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே இறக்குமதி என்று வெளி நாட்டுச் செலாவணி வந்தால் மத்திய அரசின் அனுமதி தேவை என்றிருக்கிறது. அதையும் அதிகப்படுத்தி 20 லட்சம் வரையில் இறக்குமதிக்கு வெளிநாட்டுச் செலாவணி தேவைப்பட்டால் அவைகளுக்கு லைசென்ஸ் தேவை இல்லை என்று அறிவிக்கவேண்டும் என்று நம் அரசு வற்புறுத்தியிருக்கிறது. இன்னும் பல ஆலோசனைகள், தொழிற்சாலைகளை விரைவில் தொடங்க ஊக்கம் தரும் வண்ணம் இந்தக் கொள்கை அமல்படுத்தப்பட வேண்டும். காலதாமதத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது என்றெல்லாம் வலியுறுத்தி வருகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Is this limit of Rs. 1 crore extended to Rs. 5 crores now, if there is no foreign exchange involved? That is, whether the State Government can give licences or permission to start industries with a capital of Rs. 5 crores if foreign exchange is not involved?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு கோடி பொறுத்த வரையில் 10 சதவீதம் தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து கோடி என்பது இருக்கமுடியாது.

செங்கல் உற்பத்திச்சாலை துவக்கக் கடன்கள்

* 111 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல் தொழிற்சாலைகள் துவக்குவதற்குக் கொடுத்து வந்த கடன் உதவி தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாட்டு செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு கடன் கொடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது. இயந்திரம் மூலம் செங்கல் தயாரிக்கப்படும் தொழிற்சாலைகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை கடனுதவி பெற தகுதி பெற்றவைகளாயுள்ளன.

திரு. பி. எஸ். மணியன்: நாட்டுச் செங்கல் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு கடன் கொடுப்பது என்பது நிறுத்தப்பட்டுவிட்டது. அந்தத் தொழிற்சாலைகள் கிராமப்புறங்களில் குடிசைத் தொழில்கள் வளர்ச்சிக்கு பெரிதும் பயன்படுகிற காரணத்தினால் அதுகுறித்து மறுபரிசீலனை செய்து கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இயந்திரச் சாதனங்களைக் கொண்டு உற்பத்தி செய்தால் நல்ல செங்கல் விரைவாக, ஏராளமாக, செலவைக் குறைத்து உற்பத்தி செய்யப்படும் என்ற காரணத்தினால் இந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது.